கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

**O.S.No.398/2017** தேதி:**10.07.2025**

வாதி தரப்பு சாட்சி -1 (ரவிசந்திரன்,த/பெ.குப்புசாமி) சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**1** முதல் **3** ஆம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

எந்தனை ஆண்டுகாலமாக வானமாதேவி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன் என்றால் ஜீலை 1 முதல். இதற்கு முன்பாக நான் இராமபுரம் கிராமத்தில் பணியாற்றினேன். வழக்கு சொத்து கோதண்டராமபுரத்தில் உள்ளது. கோதண்டராமபுரத்தில் நான் 2015 ல் இருந்து 2018 வரை பணியாற்றினேன். நான் கொடுத்த ஆவணம் தான் Ex. X1 என்றால் சரிதான். அதன் அசல் எங்கு இருக்கிறது என்றால் தாலுக்கா அலுவலகத்தில் உள்ளது. எனக்கு வந்த அழைப்பாணையில் Ex. X1 ன் அசலை எடுத்து வருமாறு குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் இல்லை. அரசு ஆவணங்களுடன் நேரில் ஆஜராகும் படி குறிப்பிடப்பட்டிருந்தது. எந்த ஆவணம் என்று குறிப்பிட்டு சொல்ல வில்லை என்றால் சரிதான். Ex. X1 ல் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். ஆவணங்களைப் பார்த்து கூற முடியும். வழக்கு சொத்தை நான் நேரடியாக பார்க்க வில்லை.

நீதிமன்றத்தின் அனுமதியின் பெயரில் மறுவிசாரணை

நான் கொடுத்த அறிக்கை Ex. X1 ஆனது வழக்கு சொத்தை பார்த்து ஆய்வு செய்துதான் கொடுத்தேன் என்றால் சரிதான்.

PHEBE B Digitally signed by PHEBE B
Date: 2025.07.10 18:27:10 +0530

நீதிமன்றத்தின் அனுமதியின் பெயரில் மறு குறுக்கு விசாரணை

Ex. X1 ஆவணத்தில் என்ன குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் வேலுமணி ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளேன். எப்பொது ஆக்கிரமித்தார் என்றால் 26.10.2016. 26.10.2016 என்பது நான் விசாரணை செய்த தேதி என்றால் மனு கொடுக்கப்பட்ட தேதி தான் 26.10.2016 . 07.11.2016 ல் நான் விசாரணை முடித்து அறிக்கை சமர்ப்பித்தேன். என்று விசாரணை முடித்தேன் என்றால் 07.11.2016 லேயே விசாரணை செய்து அன்றே அறிக்கை சமர்ப்பித்தேன். Ex. X1 ஆனது விசாரணை செய்யாமல் இடத்தையும் பார்வையிடாமல் வாதிக்கு சாதகமாக சான்றளித்துள்ளேன் சரியல்ல. நான் விசாரணை செய்து நேரில் பார்வையிட்டு தான் அறிக்கை சமர்ப்பித்தேன்.வழக்கு சொத்தினை வேலுமணி குடும்பம் தான் பல ஆண்டுகளாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் அது பற்றிய விவரம் எனக்கு தெரியாது.

ஆவணங்கள் ஏதும் தாக்கல் இல்லை.
குறுக்கு விசாரணை தொடர்ச்சி முற்றிற்று .

PHEBE B Digitally signed by PHEBE B
Date: 2025.07.10 18:27:17 +0530